# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097183

1. District : விருதுநகர் PS: ஊ.த.க. பிரிவு விருதுநகர் Year: 2020 FIR No.: 01/2020 Date: 12.03.2020
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7of Prevention of
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Corruption (Amendment)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 28.02.2020 நாள் முதல் 09.03.2020 நாள் வரை
Time Period : 15.00 hrs Time from : 15.00 hrs Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 12.03.2020 Time : 09.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சார்நிலைக் கருவூலகம். இராஜபாளையம். விருதுநகர் மாவட்டம் 61 கி.மீ வடமேற்கு
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P S : District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. கார்த்திக் பிரபு (b) Father's/ Husband's Name : கருப்பசாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : விவசாயம் (g) Address : கதவு எண். 260/4, மேற்கு தெரு, சந்திரராஜபுரம் அஞ்சல், இராஜபாளையம் தாலுகா, விருதுநகர் மாவட்டம்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. இளங்கோவன், உதவியாளர், சார்நிலைக் கருவூலகம், இராஜபாளையம். விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

அறியாமல் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் இன்று 12.03.2020ம் தேதி காலை 09:30 மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் நகர், சுந்தரராஜபுரம் அஞ்சல், கதவு எண் 260/4, மேற்குத் தெரு என்ற முகவரியை சேர்ந்த கருப்பசாமி என்பவரின் மகன் திரு. கார்த்திக்பிரபு என்பவர் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று மேற்படி மனு மீது இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்து இன்று (12.03.2020) காலை 11.30 மணிக்கு (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ....................... Rank ....................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ................................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Karthick Prabhu
12.3.2020
(Karthick Prabhu).

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Name: பெயர் S VIMALA
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண் ...........
VdAC. VNR.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.03.2020 at 13.30hrs

அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் கார்த்திக்பிரபு, த/பெ.கருப்பசாமி, கதவு எண். 260/4, மேற்கு தெரு, சுந்தரராஜபுரம் அஞ்சல், இராஜபாளையம் தாலுகா, விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, நான்மேலே கண்ட முகவரியில் மனைவி மற்றும் குழந்தைகளுடன் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எனது தம்பி திரு.சொர்ணராஜ் மத்திய ஆயுதப்படையில் காவல் உதவி ஆய்வாளராக பஞ்சாப் மாநிலத்தில் பணிபுரிந்து வருகிறார். அவருக்கு இன்னும் திருமணமாகவில்லை. எனது அம்மா திருமதி.கருப்பாயி துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து கடந்த 31.08.2017ஆம் தேதி ஓய்வு பெற்று, கடந்த 07.07.2018ஆம் தேதி உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். அவர் அரசு ஊழியராக இருந்தவர் என்பதால் அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய பணப்பலன்களை பெறுவதற்கு நான் ஒரு விண்ணப்பத்தினை எழுதி, அந்த விண்ணப்பத்துடன் என் அம்மாவின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை இணைத்து இராஜபாளையம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கொடுத்தேன். அதன் பின்பு கடந்த 12/2019ஆம் மாதம் விருதுநகர் மாவட்ட கருவூலக அலுவலகத்திலிருந்து, சென்னை பொது கணக்கு அலுவலருக்கு அனுப்பப்பட்ட L.Dis.15272/G3/2019, நாள்.05.12.2019 நாளிட்ட கடிதத்தின் நகல் ஒன்று எனது பெயருக்கு வந்தது. அந்த கடித நகலுடன் நான், கடந்த 12/2019ஆம் மாதம் ஒருநாள் மாலை சுமார் 3.30 மணியளவில் இராஜபாளையம் சார் நிலை கருவூலக அலுவலகத்திற்கு சென்று விசாரித்து, இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் உதவியாளர் திரு.இளங்கோவன் அவர்களை பார்த்து விபரம் கேட்டேன். அதற்கு அவர் ஆமாம் எங்கள் அலுவலகத்திற்கு அந்த தபால் ஒன்று வந்துள்ளது என்றும், அதுசம்பந்தமான பைல்களை நான்தான் தயார் செய்வேன் என்றும், அதன்பின்பு உங்களது வங்கிக்கணக்குகளில் பணம் வரவு வைக்கப்படும் என்றும், அதன்பின்பு உங்களது அம்மா இறந்ததற்குரிய இறுதி சடங்கு செலவிற்கு அரசு வழங்கும் தொகைக்கான பைல்களையும் நான்தான் தயார் செய்து சென்னை பொது கணக்கு அதிகாரிக்கு அனுப்புவேன் என்றும் கூறி, இந்த வேலைகளை நான் செய்து தருவதற்கு எனக்கு ரூ.5,000/- கொண்டுவந்து தரவேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் சார் நான் விவசாயம் செய்துதான் பிழைப்பு நடத்திவருகிறேன், அவ்வளவு பணமெல்லாம் என்னால் ரெடி பண்ண இயலாது என்றும், நீங்க பார்த்து செய்யுங்க சார் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் இதுசம்பந்தமாக பலதடவை இராஜபாளையம் சார்நிலை கருவூலம் சென்று பிற்பகல் அலுவலக நேரத்தில்

உதவியாளர் திரு.இளங்கோவன் அவர்களை சந்தித்து கேட்டுள்ளேன். கேட்கும்போதெல்லாம் அவர் என்னிடம் நான் கேட்ட பணம் ரூ.5,000/- கொண்டுவந்திருக்கிறாயா என்று கேட்டு, கடைசி தடவை கடந்த 28.02.2020ஆம் தேதி மாலை சுமார் 3.00 மணியளவில் சந்தித்தபோது உங்களது வங்கிக்கணக்குகளில் வரவாக வேண்டிய பணம் வரவாகியிருக்கும் என்றும், உங்களது அம்மா இறந்ததற்குரிய இறுதி சடங்கு செலவிற்கு அரசு வழங்கும் தொகைக்கான பைல்களை நான் தயார் செய்து அனுப்பிவிடுவேன் என்றும், இவ்வளவு வேலைகளையும் நான் செய்ததற்கு நான் கேட்ட ரூ.5,000/-த்தை கொண்டுவந்து கொடுக்கவேண்டும் என்றும், அவ்வாறு அந்த ரூ.5000/-த்தை நீங்கள் கொண்டுவந்து கொடுக்கும்போது இறுதி சடங்கு செலவிற்கு அரசு வழங்கும் தொகைக்கான பைல்களை பொது கணக்கு அதிகாரிக்கு அனுப்பியதற்குரிய தபாலின் நகலை கொடுப்பேன் என்றும் கூறினார். அப்போதும் நான் அவரிடம் விவசாயம் செய்துதான் பிழைப்பு நடத்திவருகிறேன் என்றும், அவ்வளவு பணம் என்னால ரெடி பண்ண இயலாது என்றும், நீங்க பார்த்து செய்யுங்க சார் என்றும் கூறிவிட்டு வந்துவிட்டேன். பின் கடந்த 09.03.2020 மதியம் சுமார் 3.00 மணியளவில் இராஜபாளையம் சார் நிலை கருவூல அலுவலகத்திற்குச் சென்று, ஏற்கனவே சந்தித்த உதவியாளர் திரு.இளங்கோவன் அவர்களை சந்தித்து இறுதி சடங்கு செலவிற்கு அரசு வழங்கும் தொகைக்கான பைல்களை தயார் செய்து அனுப்புவது சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர் இறுதி சடங்கு செலவிற்கு அரசு வழங்கும் தொகைக்கான பைல்களை தயார் செய்து சென்னை பொது கணக்கு அதிகாரிக்கு அனுப்பிவிட்டேன் என்றும், இவ்வளவு வேலைகளையும் செய்ததற்கு ஏற்கனவே நான் கேட்ட பணம் ரூ.5,000/-த்தை கொண்டுவந்திருக்கிறாயா என்றும் கேட்டார். அதற்கு நான் அவரிடம் நீங்க பார்த்து செய்யுங்க சார் என்றும், அவ்வளவு பணம் என்னால புரட்ட முடியாது என்றும் கூறினேன். அதற்கு அவர் நான் கேட்ட ரூ.5,000/-த்தில் ரூ.1,000/-த்தை குறைத்துக்கொண்டு ரூ.4,000/-த்தை ரெடி பண்ணி கொண்டுவா என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் என் தம்பியும் வெளி மாநிலத்தில் வேலை செய்கிறான் சார் என்றும், இவ்வளவு பணத்தையும் நான் மட்டும் ரெடி பண்ண முடியாது சார் என்றும் கூறினேன். அதற்கு அவர் நான் கேட்ட ரூ.4,000/-த்தில் உன் பங்குக்குரிய ரூ.2,000/- மட்டும் நீ ரெடி பண்ணி கொண்டுவா என்றும், உன் தம்பி வெளிமாநிலத்திலிருந்து வந்தபிறகு அவர் பங்குக்குரிய ரூ.2,000/-ஐ நீ வாங்கிட்டு வந்து கொடு என்றும் கூறிவிட்டு, உன் பங்குக்குரிய ரூ.2,000/-த்தை நீ வந்து கொடுத்தால்தான் இறுதி சடங்கு செலவிற்கு அரசு வழங்கும் தொகைக்கான பைல்களை தயார் செய்து சென்னை பொது கணக்கு அதிகாரிக்கு அனுப்பியதற்கான கடிதத்தின் நகலை உன்னிடம் கொடுப்பேன் என்று கூறினார். நானும் வேறுவழியில்லாமல் சரியென்று சொல்லிவிட்டு, வீட்டிற்கு வந்து யோசனை

செய்து பார்த்ததில், அவர் நியாயமாக செய்ய வேண்டிய அரசு வேலைக்கு நாம ஏன் லஞ்சம் தரணும் என்று லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாமல் இன்று (12.03.2020) காலை 10.00 மணிக்கு விருதுநகர் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு வந்து ஓய்வு பெற்ற அரசு ஊழியரான இறந்துபோன எனது அம்மாவின் வாரிசுகளான எனக்கும், எனது தம்பிக்கும் வரவேண்டிய பணப்பலன்கள் கிடைக்க ஏற்பாடு செய்ததற்கும், அம்மாவின் இறுதி சடங்கு செலவிற்காக அரசு வழங்கும் தொகைக்கான பைலை தயார் செய்து அரசு பொது கணக்கு அதிகாரிக்கு அனுப்பியதற்கும், என் பங்குக்குரிய தொகையாக என்னிடம் ரூ.2,000/- லஞ்சப்பணம் கேட்ட இராஜபாளையம் சார் நிலை கருவூலத்தில் பணிபுரியும் உதவியாளர் திரு.இளங்கோவன்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள (Sd)(K.Karthickprabhu) Sir, Received the complaint on 12.03.2020 at 9.30 hrs. The genuiness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found bad, and found prima-facie for the mentioned allegation of the complaint, since the registration of regular case is warranted in the prima-facie. The matter is intimated to the SP SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.1/2020 u/s 7 of PC Act (Amendment) 2018 at 11.30 hrs. today on 12.03.2020 and took up for investigation. (Sd) (S.Vimala) 12.03.2020 Inspector of Police, V&AC, Virudhunagar.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble Chief Judicial Magistrate Court/Special Judge for Prevention of Corruption Act 1988 cases, Srivilliputhur and the copies submitted to the concerned officers.

12/03/2020.
(S.VIMALA)
Inspector of Police
V&AC. Virudhunagar.